# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## தொலைநிலைக் கல்வித் தேர்வுப் பிரிவு

திருச்சி சாலை, தஞ்சாவூர்613010

---

முனைவர் தி. சிவக்குமார்

கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்(பொ) 21.12.2021

சுற்றறிக்கை

பொருள் : தொலைநிலைக் கல்வித் தேர்வுப் பிரிவு – இளங்கல்வியியல் பாடப் பிரிவு – இரண்டாமாண்டு – செய்முறைத் தேர்வு – திசம்பர் 2020 மற்றும் மே 2021 – கொரோனா பொது முடக்கக் காலம் – கற்பித்தல் பயிற்சி முடிக்காமை - மீண்டும் செய்முறைத் தேர்வு நடத்துதல் – 26.12.2021 – தொடர்பாக.

பார்வை : 1. 22.08.2021 அன்று நடைபெற்ற செய்முறைத் தேர்வு

2. 15.12.2021 அன்று நடைபெற்ற தேர்ச்சிக்குழுக் கூட்டப் பரிந்துரை

3. துணைவேந்தரவர்களின் ஆணை நாள் 20.12.2021

---

பார்வை 3ல் காணும் ஆணையின்படி, தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்விவழி இளங்கல்வியியல் பாடப் பிரிவுக்கான திசம்பர் 2020 மற்றும் மே 2021ம் பருவத்தில் 22.08.2021 அன்று நடைபெற்ற செய்முறைத் தேர்வு நாளுக்குள் கற்பித்தல் பயிற்சி முடிக்காத மாணவர்கள், கொரோனா கால பொது முடக்கக் காலத்தில் பள்ளிகளில் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளாத சூழல் இருந்ததாலும், மேற்காணும் நாளுக்குப் பின்னர் கற்பித்தல் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு வருகிற 26.12.2021 அன்று காலை 10.00 மணி முதல் 5.00 முடிய மாணவர்களின் நலன் கருதி மீண்டும் செய்முறைத் தேர்வு ஏற்கனவே பங்கேற்ற மையங்களில் நடைபெறவுள்ளது.

எனவே, மாணவர்கள் இச்செய்முறைத் தேர்வில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 22.08.2021 அன்று செய்முறைத் தேர்வில் கற்பித்தல் பயிற்சி நிறைவு செய்து வருகைப் பதிவேடு மற்றும் வருகைச் சான்றிதழ் அளித்த மாணவர்களுக்கு இத்தேர்விலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

21/12/21

கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்(பொ)

பெறுநர்:

1. தொடர்புடைய தேர்வு மையங்கள் (ம) மைய ஒருங்கிணைப்பாளர்கள்
2. மாணவர்கள்